# பொதுக்காலம் 18 ஆம் வாரம்
## திருவழிபாடு ஆண்டு B

**இன்றைய வாசகங்கள்:**

விடுதலைப் பயண நூலிலிருந்து வாசகம் 16: 2-4,12-15,

பல்லவி: ஆண்டவர் அவர்களுக்கு வானத்து உணவை வழங்கினார்.,

திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய

திருமுகத்திலிருந்து வாசகம் 4: 17, 20-24,

யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 6: 24-35

## திருப்பலி முன்னுரை:

இயேசுவுக்குரியவர்களே,

இறைத்திருமகன் இயேசுவின் அன்பில் அவருடைய புனித நாளாகிய இன்று ஞாயிறு வழிபாட்டில் பங்கேற்க அணியமாயிருக்கும் உங்கள் அனைவருக்கும் அன்பான வாழ்த்தைக் கூறிக்கொள்கிறேன். பொதுக்காலத்தின் பதினெட்டாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இன்றைய திருவழிபாடு நிலைவாழ்வுக்கான உணவைத் தேட நமக்கு அழைப்பு விடுக்கிறது. இயேசு செய்த அற்புதத்தால் அப்பங்களை வயிறார உண்ட மக்கள், மீண்டும் உணவைத் தேடி இயேசுவிடம் செல்கின்றனர். இயேசு அவர்களிடம், தானே வாழ்வு தரும் உணவு என்று எடுத்துரைக்கிறார். மனித உடல் எடுத்த இறைமகன் இயேசு, நற்கருணை வடிவில் தன்னையே நமக்கு உணவாகத் தருகிறார். நமது ஆன்மத் தேவைகளுக்காக நிலைவாழ்வு அளிக்கும் உணவாம் இயேசுவைத் தேடும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. வாழ்வு தருபவராம் இறைவா,**

உமது அருள் நலன்களால் ஊட்டம் பெற்று, திருச்சபை செழித்தோங்க உழைக்கும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் இறைமக்களின் ஆன்மத் தேவைகளை நிறைவேற்றுபவர்களாய் செயல்பட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**2. நிலைவாழ்வு அளிப்பவராம் இறைவா,**

நற்கருணை வழியாக உமது திருமகனை உணவாக உட்கொள்ளும் எங்கள் பங்குத் தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவரும், நீர் விரும்பும் உண்மை, தூய்மை ஆகியவற்றின் நெறியில் நடந்து, நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள அருள்புரிய வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.

**3. அரவணைக்கும் அன்பின் இறைவா,**

எங்கள் குடும்பங்களிலுள்ள அனைவரும் தனிப்பட்ட துறையில் ”எனக்கோ எவ்வளவோ வாய்ப்பு இருந்தும், மற்றவரோடு பகிராமல் சுயநலமாக உள்ளேனா?” என்று தங்களைப் பற்றி ஆய்வு செய்து எமக்கு அடுத்திருப்பவர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் தாராள மனதை இறைவன் நமக்குத் தரவேண்டும் இறைவா உம்மை என்று மன்றாடுவோம்.

**4. அற்புதங்கள் செய்பவராம் இறைவா,**

இயந்திரமாக இயங்கும் இந்தச் சமுதாயவாழ்க்கை முறையில் வேலைகளில் மூழ்கித் தத்தளிக்கும் நாம், ஒவ்வொரு நாளும் சிறிது நேரம் ஒதுக்கி, இறைவனுக்கும், நம்முடைய நலனுக்கும் தகுந்த இடத்தை வழங்கவும், அடுத்தவர் தேவை அதிகம் என்பதை உணர்ந்து, நமது தேவைகளை ஒதுக்கிவிட்டு, அடுத்தவருக்கு உதவிக்கரம் நீட்டும் தாராள மனதை இறைவன் நமக்குத் தரவேண்டும் என்று மன்றாடுவோம்.

**5. உயிரைச் சாவினின்று காக்கின்ற தந்தையே இறைவா!**

யாரும் நினையாத ஆன்மாக்களுக்கும், மரணத்தறுவாயிலுள்ள துன்புறும் அன்பர்கள் அனைவரும் இறைமகன் இயேசுவின் நிலையான அமைதியையும், பேரின்பவீட்டின் இன்பத்தையும் முழுமையாகப் பெற்றிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**6. எங்கள் அன்பு தந்தையே இறைவா!**

உமது பிள்ளைகள் இளையோராகிய நாங்கள் ”எமது தேவைகளில் முதன்மையான தேவை நீரே” என்று உணர்ந்து நாங்கள் முழுமையாக உம் கரம் பற்றிக் கொள்ளவும், நிலைவாழ்வுப் பெற்று உம்மை அடையவும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.